2057

சமூகங்களின்

எழுச்சியும் வீழ்ச்சியும்

மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

297.124
அபுல்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெ

சமுதாயங்களின்

எழுச்சியும் வீழ்ச்சியும்

JAMA'ATH-E-ISLAMI STUDY CIRC
1 Q, MANIPAY ROAD,
JAFFNA - SRI LANKA

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

7767

WITH THE COMPLIMENT OF
CEYLON JAMA'ATH-E-ISLAMI

வெளியிடுவோர் :

இலங்கை ஜமா அதே இஸ்லாமி
204/1, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,
கொழும்பு-9.

RISE AND FALL OF NATIONS
(TAMIL)

FIRST EDITION – APRIL 1981

முதற் பதிப்பு - ஏப்ரல் 1981

AUTHOR :
MOULANA ABUL A'LA MOUDOODI (RAH)

TRANSLATED BY :
MOULAVI A. L. M IBRAHIM

PUBLISHED BY :
CEYLON JAMA'ATH-E-ISLAMI
204/1, Sri Vajiragnana Mawatha,
Colombo-9. (Sri Lanka)
Cable : 'CEYJAMAAT' Colombo
Phone : 92760

PRINTED BY :
S.H. NILABDEEN
I.P.C. PRINTING PRESS
320, N.M.M. ISHAK MAWATHA,
COLOMBO-9.
Phone : 98771

297.124
7767

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

முன்னுரை

7767

மனிதன் நற்சிந்தனை பெற்று நல்லன செய்யும்போது சிறப்புறுகிறான்; தீய சிந்தனையால் தூண்டப்பட்டு தீமைகள் செய்யும்போது வீழ்ச்சியடைகிறான். இது தனி மனிதனுக்குப் போலவே சமூகங்களுக்கும் பொருந்தும்.

ஒரு சமூகத்தின் பெரும்பான்மையான மக்கள் நன் நம்பிக்கையும், சிறந்த நடத்தையும் உள்ளவர்களாக இருந்தால் அச்சமூகம் சிறந்து விளங்கும். பெரும்பாலோர் பிழையான நம்பிக்கையுடையோராகவும், தவறான நடத்தையுள்ளவர்களாகவும் இருந்தால் அச்சமூகம் வீழ்ச்சியுறும்.

உலகின் பல்வேறு சமூகங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நோக்கும்போது இவ்வுண்மையை உணர முடிகின்றது.

இந்நூல் அளவில் சிறியது; எனினும் இதிலுள்ள கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை இதைப் படிப்போர் உணர்வர். ஒரு காலத்தில், உலகில் கோலோச்சி வாழ்ந்த சமூகங்கள், அவை கடைப்பிடித்த தீமை பயக்கும் செயல்கள் காரணமாக எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதை பெரும் இஸ்லாமிய சிந்தனையாளரும், மார்க்க மேதையுமான மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் திருக்குர்ஆன் ஆதாரங்களுடன் தமக்கே உரிய தனிப் பாணியில் இதில் விளக்கியிருக்கின்றார்கள்.

கடந்தகால சமூகங்கள் பல அழிவுறுவதற்கு எவை காரணமாக அமைந்தனவோ, அவற்றையே தமது எழுச்சிக்கு

வழிகோலும் சரியான வழிமுறைகள் என இன்று பலர் கருதத் தொடங்கியுள்ளனர்.

உலகுக்கு வழிகாட்ட வந்த முன்மாதிரி சமூகமான முஸ்லிம் சமூகமும் 'இதற்கு விதிவிலக்கல்ல' என்று கூறுவதுபோல் சிறப்புக்குரிய நேரான வழியை விடுத்து, அதுவும் இப்போது தவருன வழியிலேயே செல்ல முனைந்துள்ளது என்பதை அதன் போக்கு நிரூபிக்கின்றது. அது வேதனைமிக்க, ஆனால் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகவே, முஸ்லிம்கள் மாத்திரமன்றி முழு மனித சமூகமும் இத்தீமைகளிலிருந்து விடுபட்டுச் சிறப்புற வேண்டுமாயின் அல்லாஹ் அருளிய போதனைகளுக்கேற்ப, இஸ்லாமிய நெறிமுறைகளின் அடிப்படையில் தம்மை மாற்றியமைத்துக் கொள்வது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

இதனையுணர்ந்து சகலரும், குறிப்பாக முஸ்லிம்களாகிய நாம் செயற்பட்டு இவ்வுலகில் ஈடேற்றத்தையும் மறுமையில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போமாக; ஆக்கப்பணிகளில் ஈடுபடுவோமாக.

இவ்வண்ணம்,
மௌலவி ஏ. எல். எம். இப்ருஹிம்
அமீர்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
கொழும்பு-9.
25 ஜமா. அவ்வல் 1401
01 – 04 – 1981.

சமுதாயங்கள் அழிக்கப்பட்டதேன்?

அல்லாஹுத் தஆலா நீதியாளன்; அவன் எவருக்கும் அநீதி செய்வதில்லை என்ற ஒரு பொதுவான நியதியை அவன் திருமறையில் தெளிவாகக் கூறியுள்ளான். எனவே நல்ல காரியங்களைச் செய்யும் எந்தச் சமூகத்தையும் எவ்விதமான காரணமுமின்றி அவன் அழிக்கமாட்டான். ''(நபியே,) ஓர் ஊரை அவ்வூரார் நல்லவர்களாக இருக்கும் நிலையில்-அக்கிரமமாக அவ்வூரார் அனைவரையும் உமது இறைவன் அழித்துவிடமாட்டான்'' (11;117) என்பது திருமறையின் ஒரு வசனம்.

ஓர் ஊரை அழிப்பது என்பதன் பொருள் அவ்வூரைத் தலைகீழாகப் புரட்டிவிடுவதும் அவ்வூர் மக்கள் அனைவரையும் கொன்று குவித்து விடுவதும் மட்டும்தான் என்பதன்று; அந்தச் சமூகத்தவரிடையே கட்டுப்பாட்டை இல்லாமலாக்குவதும், அவர்களிடையே பிளவையும் பிரிவையும் ஏற்படுத்தி விடுவதும், அவர்களுக்கு இழிவையும் அவமானத்தையும் அடிமைத்துவத்தையும் ஏற்படுத்தி விடுவதும்கூட ''அழிப்பது'' என்பதில் அடங்கும்.

குற்றம் புரியும் சமுதாயங்கள்

நற்கருமங்களைச் செய்யும் எந்தச் சமூகத்தையும் அநியாயமாக அல்லாஹ் அழித்து விடுவதில்லை என்ற குர்ஆனின் பொது நியதி, நல்ல காரியங்களைச் செய்வதைவிட்டு தீச்

செயல்களில் ஈடுபட்டு அட்டூழிய அட்டகாசங்களைப் புரிய முற்பட்டாலன்றி, எந்தச் சமூகமும் அழிந்துவிடமாட்டாது என்பதைத் தெளிவாக்குகிறது. குற்றம் புரியும் சமுதாயங்களே அழிகின்றன என்பது பொது நியதியாதலால்தான் உலகில் தோன்றிய எந்தச் சமூகமாவது அழிக்கப்பட்டதாக திருமறையில் குறிப்பிடப்படும் இடங்களிலெல்லாம் அடுத்த வசனத்திலேயே அந்தச் சமூகத்தவர் புரிந்த குற்றத்தையும் இறைவன் சொல்லிக் காட்டியுள்ளான்.

இவ்வாறு குறிப்பிடப்படுவதன் நோக்கம் மனிதர்கள் தங்களின் தீயசெயல்களின் காரணமாகவே இம்மையிலும் மறுமையிலும் துன்புறுகிறார்கள் என்பதை உணர்த்துவதாகும். பின்வரும் திருமறை வசனமும் இக்கருத்தைத் தெளிவாக்குகின்றது. ''(அவர்கள்) ஒவ்வொருவரையும் அவரவருடைய பாவத்தின் காரணமாகவே நாம் (பலவாறாகப்) பிடித்துக் கொண்டோம். அவர்களில் (''ஆத்'' ஜனங்களைப் போன்ற) சிலர் மீது நாம் கல்மாரி வருஷித்தோம். அவர்களில் (ஸமூது ஜனங்களைப் போன்ற) சிலரை இடிமுழக்கம் பிடித்துக்கொண்டது. அவர்களில் (காரூன் போன்ற) சிலரை நாம் பூமியில் ஆழ்த்திவிட்டோம். அவர்களில் (பிர்அவ்ன், ஹாமான் போன்ற) சிலரைச் (சமுத்திரத்தில்) மூழ்கடித்தோம்- அல்லாஹ் இவர்களுக்குத் தீங்கிழைக்கவில்லை; எனினும் அவர்கள் (யாவரும்) தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்கள்'' (29:40)

தனி நபர் பொறுப்பல்ல

அல்லாஹ்வின் இந்த நியதியிலிருந்து, ஒரு சமூகத்தின் அழிவுக்குக் காரணம் அதன் தனிப்பட்ட உறுப்பினர் செய்யும் தீமைகளோ, அக்கிரமங்களோ அல்ல; சமூகமே தீயசெயல்களிலும் அக்கிரமங்களிலும் ஈடுபடுவதாகும் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்கிறோம். அதாவது ஒரு சமூகத்தில் உள்ள தனிப்பட்ட சிலரின் நம்பிக்கைகளும், செயல்களும் கெட்டவைகளாக இருந்தாலும்கூட, அந்தச் சமூகத்தின் பெரும்பாலானோர் சன்மார்க்கத்திலும் ஒழுக்

கத்திலும் உயர் நிலையில் இருந்தால், அந்தச் சமூகத்தில் ஒரு சில தீயவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அல்லாஹ் அந்த சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையும் அழித்துவிட மாட்டான். ஆனால் நம்பிக்கைகளிலும் நடத்தைகளிலும் தனிப்பட்டவர்களிடம் காணப்படும் பிழைகள் சமூகத்தில் பெரும்பாலான மக்களிடமும் பரவிவிட்டால், தீமைகளையும் அக்கிரமங்களையும் ஆதரிக்கும் அளவுக்கு அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் சன்மார்க்க, ஒழுக்க உணர்வுகள் மழுங்கிவிட்டால், இந்நிலையில் அந்தச் சமூகம் அல்லாஹ்வின் அன்பை இழந்து அவனது கோபத்துக்கு ஆளாகிவிடும். இதனால் அந்தச் சமூகம் உயர் நிலையை இழந்து படிப்படியாக கீழ்நிலை நோக்கிச் செல்லும். இறுதியாக அந்தச் சமூகத்து மக்கள் மீது அல்லாஹ்வின் கோபம் மிகைத்து அவர்கள் அனைவரும் பூண்டோடு அழிக்கப்படுவார்கள். இவ்வாறு அழிக்கப்பட்ட பல சமூகங்களைப் பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

நூஹ் (அலை) அவர்களின் சமூகத்தவர்களில் பெரும்பாலான மக்களின் நம்பிக்கையும் நடத்தையும் கெட்டு, மற்றவர்களிடமும் தீமை பரவ ஆரம்பித்தது; அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களிடம் எவ்விதமான நன்நடத்தையையும் எதிர்பார்க்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. இந்நிலையில்தான் நூஹ் (அலை) அவர்களின் சமூகத்தவர்கள் அழிக்கப்பட்டார்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. தனது சமூகத்தவர்கள் தீமை புரிவதில் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டதால் அவர்களைச் சபிக்கவேண்டிய நிர்ப்பந்தம் நூஹ் (அலை) அவர்களுக்கே ஏற்பட்டது. எனவே ''நூஹ் (நபி தன் இரட்சகனை நோக்கி) ''என் இரட்சகனே, இந்நிராகரிப்போரில் ஒருவரையும் பூமியில் வசித்திருக்க நீ விட்டுவைக்காதே. நீ அவர்களை விட்டுவைத்தால் உனது (மற்ற) அடியார்களையும் இவர்கள் நிச்சயமாக வழிகெடுத்து விடுவார்கள். பாவிகளையும் நிராகரிப்போரையுமே அன்றி (நல்லவர்களை) இவர்கள் பெற்றெடுக்கவும் மாட்டார்கள்'' (அல் குர்ஆன் 71:26, 27) என்று பிரார்த்தித்தார்கள்.

'ஆத்' சமூக அழிவு

''ஆத்'' என்ற ஜனங்களின் நிலையும் இதே போன்றது தான். அந்தச் சமூகத்தில் நல்லவர்களுக்கும் நேர்மையான வர்களுக்கும் இடமிருக்கவில்லை; கெட்டவர்களும் அக்கிர மக்காரர்களுமே அச்சமூகத்தின் தலைவர்களாகவும் அதிகாரி களாகவும் கருதப்பட்டார்கள்; நல்லவர்களை ஒதுக்கிவிட்டு தியவர்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களையே முன்மாதி ரியாகக் கொண்டு வாழும் அளவுக்கு அந்தச் சமூக மக்களின் அறிவு கெட்டபோது அல்லாஹ் அவர்களை அழித்தான். ''(நபியே!) இது ''ஆத்'' மக்களின் (சரித்திரம்) அவர்கள் தங்கள் இறைவனின் சான்றுகளை நிராகரித்து (அவர்களிடம் அனுப்பப்பட்ட) அவனுடைய தூதர்களுக்கு மாறு செய் தார்கள். அன்றி பிடிவாதக்கார முரடர்கள் அனைவருடைய (துர்ப்)போதனைகளையும் அவர்கள் பின்பற்றினார்கள்.(ஆகவே) இவ்வுலகில் அல்லாஹ்வுடைய சாபம் அவர்களைத் தொடர்ந் தது. மறுமை நாளிலும் அல்லாஹ்வின் சாபம் அவர்களைத் தொடரும்''. (அல்-குர்ஆன் 11 : 59, 60)

லூத் (அலை) அவர்களின் சமூகத்தவர்களின் நிலையும் இதே தான். இறையச்சமும் அருவெறுப்புமில்லாது சந்தைகளிலும் பொதுவிடங்களிலும் எவ்விதமான ஒளிவுமறைவுமின்றி பகி ரங்கமாகவே தீய செயல்களை செய்யக்கூடியவர்களாக லூத் (அலை) அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் மாறினார்கள். தியவைகளைத் தியவை என்று ஒப்புக் கொள் ளும் அளவுக்குக்கூட அவர்களிடையே சமூக, சமய, ஒழுக்க உணர்வு இருக்கவில்லை. இதனால் அல்லாஹ் அவர்கள் அனை வரையும் அழித்துவிட்டான்.

இதைப் பற்றி திருமறையின் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

(''லூத் (அலை) தன் சமூகத்தவர்களைப் பார்த்து) ''என்னே! நீங்கள் (பெண்களை விட்டு) ஆண்களிடம் மோகம் கொண்டு

வருகிறீர்கள்; யாத்திரிகர்களை வழிமறித்துக் கொள்ளையடிக் கின்றீர்கள். (ஜனங்கள் நிறைந்த) உங்கள் சபையிலும் (பகி ரங்கமாகவே மிக்க) வெறுக்கத்தக்க இக்காரியத்தைச் செய் கிறீர்களே'' என்று கூறினார்கள். அதற்கு (''மெய்யாகவே) நீர் உண்மை சொல்பவராக இருந்தால் அல்லாஹ்வுடைய வேத னையை எங்களிடம் கொண்டுவாரும்'' என்பதுதான் அவர்களு டைய ஜனங்களின் பதிலாக இருந்தது.'' (29: 29)

''மத்யன்'' வாசிகள் அழிவு

மத்யன்நகர் மக்கள் ஏமாற்றுப் பேர்வழிகளாகவும் கொடுக்கல் வாங்கல்களில் தகடுதத்தம் செய்வோராகவும் இருந்தனர். இதனால் அவர்களை அல்லாஹ் வேதனை செய் தான். அளவை நிறுவையில் மோசடி செய்வதும், தனக் குரியதைவிட மேலதிகமாக எடுப்பதும் தவறான செய்கைகள் என்ற எண்ணம்கூட அவர்களிடம் இல்லாமற் போயிற்று. தங்களின் மோசடிகளையும் பித்தலாட்டங்களையும் இழிவான செயல்கள் என்று தாங்கள் கருதவில்லை என்பது மட்டுமன்றி அவை நிய செயல்கள் என்று உணர்த்தியோரை கிண்டல் செய்து நிந்தனை செய்தார்கள். தங்களிடம் எவ்வித குற்றம் குறைகளும் இல்லை, தங்களைக் குறை கூறுவோர் ஏமாளி களும், வாழத் தெரியாதவர்களுமேயாவர் என்றும் அவர்கள் கருதினார்கள். இதனால் அந்நகர மக்கள் இறைவனின் சாபத் துக்கு ஆளாகி அழிந்துபோனார்கள். அம்மக்களின் நிலையை திருமறை கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறது:

''மத்யன் (என்னும் ஊர்) மக்களுக்கு, அவர்களுடைய சகோதரர் சுஹைபை நம்முடைய தூதராக (அனுப்பினோம்.) அவர் (அவர்களை நோக்கி), ''என்னுடைய மக்களே, அல் லாஹ் ஒருவனையே நீங்கள் வணங்குங்கள்; அவனைத்தவிர வேறு நாயன் உங்களுக்கில்லை; அளவையும் நிறுவையையும் குறைக்காதீர்கள்; நீங்கள் நல்ல நிலைமையில் இருப்பதையே நான் காண்கிறேன். அவ்வாறிருக்க அளவையையும் நிறுவை யையும் குறைத்து ஏன் மோசடி செய்கிறீர்கள்? (அவ்வாறு செய்தால்) நிச்சயமாக (உங்களை)ச் சூழ்ந்துகொள்ளக்கூடிய

வேதனை ஒரு நாளில் உங்களை வந்தடையும் என்று நான் பயப்படுகிறேன்''.

''அன்றி என்னுடைய மக்களே, அளவையையும் நிறுவையை யும் நீதமாகவே பூர்த்தியாக்கி வையுங்கள். மனிதர்களுக்குக் (கொடுக்கவேண்டிய) அவர்களுடைய பொருள்களை குறைத்து விடாதீர்கள். பூமியில் விஷமம் செய்து கொண்டும் அலையா தீர்கள்''.

''நீங்கள் (உண்மையாகவே) விசுவாசங் கொண்டவர்களா யிருந்தால் (உங்கள் தொழிலில் இலாபகரமாக) அல்லாஹ் மீதப்படுத்துவதே உங்களுக்கு மிக்க மேலானதாகும். நான் உங்களைக் கண்காணிப்பவனல்ல. (அல்லாஹ்தான் உங்களைக் கண்காணிப்பவன். ஆகவே அவனுக்கு நீங்கள் பயந்து நடந்து கொள்ளுங்கள்)'' என்று கூறினர்.

''அதற்கவர்கள்'' ஷுஐபே! நாங்கள் எங்கள் மூதாதை கள் வணங்கிய தெய்வங்களை விட்டுவிடும்படியாகவும் நாங் கள் எங்கள் பொருள்களில் எங்கள் விருப்பப்படி செய் வதை விட்டுவிடும்படியாகவும் (நீர் எங்களுக்குக் கட்டளை இடும்படி) உம்முடைய தொழுகையா உம்மைத் தூண்டு கிறது? நிச்சயமாக நீர் மிகக் கிருபையுள்ள நேர்மையாளர் தான்!'' என்று (பரிகாசமாகக்) கூறினர்கள்.

அதற்கவர் 'என்னுடைய மக்களே, என் இறைவனின் தெளிவான அத்தாட்சியின் மீது நான் இருப்பதை யும் அவன் எனக்கு வேண்டிய ஆகாரத்தை நல்லவிதமாக அளித்துவருவதையும் நீங்கள் அறிவீர்களா? (இந்நிலையில் மக்களை நான் மோசம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆகவே) நான் (தீமையிலிருந்து) உங்களைத் தடுக்கும் (தீமை யான) விஷயங்களைச் செய்து உங்களுக்கு மாறுசெய்ய விரும் பவில்லை. (நீங்கள் செய்யக்கூடாது என்று கூறும் காரியத் தை நானும் செய்யமாட்டேன்.) என்னல் இயன்றமட்டும் (உங்களைச்) சீர்திருத்துவதைத்தவிர (வேறொன்றையும்) நான் விரும்பவில்லை. அல்லாஹ்வின் உதவியின்றி நான் (உங்களைச்

சீர்திருத்தும் விஷயத்தில்) வெற்றியடைய முடியாது. அவனையே நான் நம்பி இருக்கிறேன். அவனையே நான் நோக்கியும் நிற்கிறேன்''.

''என்னுடைய மக்களே, உங்களுக்கு என் மீதுள்ள விரோ தம் ''நூஹ்'' உடைய மக்களையும் ''ஹூத்'' உடைய மக்களை யும் ''ஸாலிஹ்'' உடைய மக்களையும் பிடித்தது போன்ற வேதனை உங்களையும் பிடித்துக் கொள்ளும்படி செய்துவிட வேண்டாம் ''லூத்'' உடைய மக்கள் (இருந்த இடமும் காலமும்) உங்களுக்குத் தூரமல்ல.

''ஆகவே, உங்கள் இறைவனிடம் நீங்கள் மன்னிப்பைக் கேளுங்கள்; (உங்கள் பாவங்களை விட்டும் மனம் வருந்தி) அவனிடமே நீங்கள் திரும்புங்கள், நிச்சயமாக என் இறை வன் மிக்க அன்புடையோனுகவும் (கிருபையுடன்) நேசிப் பவனுகவும் இருக்கின்றுன்'' என்று கூறினர்.

அதற்கவர்கள் ''ஷுஐபே! நீர் கூறுவதில் பெரும் பாலானவற்றை நாம் விளங்கிக் கொள்ள (முடிய) வில்லை. நிச்சயமாக உம்மை நாம் எங்களில் மிக்க பலவீனமான வராகவே காண்கிறோம். உம்முடைய இனத்தார் இல்லா விடில் உம்மைக் கல்லெறிந்தே கொன்றிருப்போம். நீர் நமது மதிப்புக்குரியவரல்லர்'' என்றார்கள்.

அதற்கவர் ''என்னுடைய மக்களே, அல்லாஹ்வைவிட என்னுடைய இனத்தாரா உங்கள் மதிப்பிற்குரியவர் களாகி விட்டனர்? நீங்கள் அவனைப் புறக்கணித்துவிட்டீர் கள்; நிச்சயமாக என் இறைவன் உங்கள் செயலைச் சூழ்ந்து கொண்டிருக்கிறுன்'' என்று கூறினர்.

''அன்றி, என்னுடைய மக்களே, நீங்கள் உங்கள் போக் கில் (உங்கள் காரியத்தைச்) செய்து கொண்டிருங்கள். நானும் (என் போக்கில் என் காரியத்தைச்)செய்து கொண் டிருக்கிறேன். இழிவுபடுத்தும் வேதனை யாரை வந்தடையும்,

பொய் சொல்பவர் யார், என்பதை நீங்கள் அதிசீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள். (அந்த நேரத்தை) நீங்கள் எதிர்பார்த்து இருங்கள்; நிச்சயமாக நானும் உங்களுடன் (அதனை) எதிர்பார்த்திருக்கிறேன்'' (என்றும் கூறினார்கள்.)

''பின்னர் (அவர்களிடம்) நம்முடைய கட்டளை வந்த பொழுது, ஷுஐபையும் அவருடன் விசுவாசங் கொண்டவர்களையும் நம் அருளைக் கொண்டு நாம் இரட்சித்துக் கொண்டோம். அக்கிரமம் செய்தவர்களை இடி முழக்கம் பிடித்துக் கொண்டது. அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே (இறந்து) கிடக்க பொழுது விடிந்தது.

''அதில் அவர்கள் ஒருகாலத்திலும் வசித்திருக்காதவர்களைப் போல் (யாதோர் அடையாளமுமின்றி) அழிந்துவிட்டனர். ''ஸமூத்'' (மக்)கள் மீதும் சாபம் ஏற்பட்டபடியே இந்த மத்யன் (மக்கள்) மீதும் சாபம் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.''*(11:84-95)*

இஸ்ரவேலர் நிலை

இஸ்ரவேலர்களின் நிலையும் இதைப் போன்றதே. அவர்கள் தீயசெயல்களைச் செய்தல், இறைவனிட்ட வரம்பைமீறி நடத்தல், ஹராம் ஹலால் பேணாது விலக்கப்பட்ட முறைகளில் பொருளீட்டல் போன்ற அடாத செயல்களைச் செய்தார்கள். அவர்களின் தலைவர்களும் அறிஞர்களும் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டார்கள். சுய நலத்தையே இலட்சியமாகக் கொண்டார்கள். சமூகத்தில் நிலவிய தீமைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை இல்லாதொழிப்பதிலும் நற்செயல்களையும் பண்புகளையும் வளர்ப்பதிலும் அவர்களுக்கு அக்கறையிருக்கவில்லை. இவ்விதமான முயற்சிக்கு வேண்டிய துணிவும் அவர்களுக்கிருக்கவில்லை. இஸ்ரவேலர் சமூகத்தில் இந்நிலை ஏற்பட்டபோது அவர்கள் மேல் இறைவன் கோபம் கொண்டான். அவர்களை வறுமை, இழிவு, இன்னல் என்பவற்றுக்கு ஆளாக்கினான். இஸ்ரவேலர்களிடையே காணப்பட்ட தீய பழக்கங்களையும் அவற்றின் காரணமாக அவர்

கள் பெற்ற தண்டனைகளையும் திருமறை பின்வருமாறு கூறுகிறது:

''(நபியே!) அவர்களில் பெரும்பாலோர் பாபத்திற்கும் அக்கிரமத்திற்கும் விலக்கப்பட்ட பொருட்களை விழுங்குவதற்கும் (மிக்க தீவிரமாக) விரைந்து செல்வதை நீர் காண்பீர். அவர்கள் செய்பவை மிகத் தீயவை. அவர்கள் (பொய் சொல்லி) பாபமான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்தும் விலக்கப்பட்டவைகளை விழுங்குவதிலிருந்தும் (அவர்களின் பண்டிதர்களாகிய) ''ரிப்பிய்யூன்''களும் (பாதிரிகளாகிய) ''அஹ்பார்''களும் அவர்களைத் தடை செய்யவேண்டாமா? இவர்களுடைய செயல் மிகக்கெட்டது''. (5: 62,63)

''இஸ்ராயீலின் சந்ததிகளில் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்கள் தாவூத், மரியமுடைய மகன் ஈஸா ஆகிய இவர்கள் நாவாலும் சபிக்கப்பட்டே இருக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் (அக்காலத்திலும்) வரம்பு கடந்தும் பாவம் செய்தும் வந்தனர்; (அன்றி) அவர்கள் செய்து வந்த எந்த விலக்கப்பட்ட காரியத்தையும் ஒருவருக்கொருவர் தடை செய்வதுமில்லை. அவர்கள் செய்து கொண்டிருந்தவையும் நிச்சயமாக மிகத் தீயவை.'' (5: 78, 79)

ரசூல் (ஸல்) அவர்கள் விளக்கம்

மேலே உள்ள இருதிருமறை வசனங்களையும் விளக்கி ரசூல் (ஸல்) அவர்கள் கூறிய கருத்துக்கள் குர்ஆனில் கூறப்பட்ட உண்மைகளை மேலும் தெளிவுபடுத்துகின்றன. ரசூல் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளின் சுருக்கம் வருமாறு:

இஸ்ரவேலர்கள் தீயவர்களாகி தீமையையே செய்து வந்தபோது முதல் முறையாக ஒருவர் மற்றொருவர் தீங்கு செய்யக் கண்டால் ''இதோ இங்கே பார், அல்லாஹ்வை அஞ்சி நட, நீ ஈடுபட்டுள்ள இந்தத் தீய காரியத்தைவிட்டு விடு, இது உனக்குத் தகாது'' என்று கூறுவார். ஆனால்

அதே நபர் அந்தப் பாவமான காரியத்தையே செய்வதை மற்றொருமுறை முதலாம் மனிதன் கண்டால் அதைக் கண்டிக்கமாட்டார். அவரும் பாவத்தில் ஈடுபட்டுள்ள மனிதனுடன் சேர்ந்து கொண்டால், பாவியான மனிதனுடன் தான் சேரக் கூடாது; அவருடன் உணவு அருந்தவோ பானங்களைக் குடிக்கவோ கூடாது என்று நினைக்கமாட்டார்.

அந்தப் பாவியுடனேயே கூட்டாகச் சேர்ந்து விடுவார். அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டதால் இறைவன் அவர்களின் மனங்களிலிருந்து நன்மை தீமை பற்றிய உணர்வுகளை அகற்றி விட்டான். திருமறையில் அல்லாஹ் இதையே கூறுகிறான்: ''இஸ்ராயீலின் சந்ததிகளில் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்கள் தாவூத், மரியமின் மகன் ஈஸா ஆகிய இவர்கள் நாவாலும் சபிக்கப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் (அக் காலத்திலும்) வரம்பு கடந்தும் பாபம் செய்தும் வந்தனர். (அன்றி) அவர்கள் செய்து வந்த விலக்கப்பட்ட காரியங்களை ஒருவருக்கொருவர் தடை செய்யவுமில்லை. அவர்கள் செய்துகொண்டிருந்தவையும் நிச்சயமாக மிக்க தீயவை'' (5 : 78, 79) என்று ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒருபக்கமாகச் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்த இறைதூதர் அவர்கள் இதைக் கூறிவிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு ''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். நீங்கள் கட்டாயமாக நன்மையைக் கொண்டு ஏவவேண்டும். தீமையை விலக்கவேண்டும். இக்கடமைகளில் நீங்கள் தவறினால் உங்கள் உள்ளங்களில் உணர்வுகளை இறைவன் இல்லாமலாக்குவான் அல்லது இஸ்ரவேலர்களை சபித்ததே போல் அவன் உங்களையும் கோபித்துவிடுவான்'' என்று மிகவும் உருக்கமாக எச்சரித்தார்கள்.

நம்பிக்கைகளும் நன்நடத்தைகளும்

நம்பிக்கைகளும் நடத்தைகளும் கெட்டுவிடுவது தொற்று நோய் பரவுவது போன்றதாகும். பலவீனர்களான ஒரு சில

ரையே தொற்று நோய் முதலில் தாக்குகிறது. சுகாதாரத் துறையில் போதிய கவனஞ் செலுத்துவதோடு, அழுக்குகளை அகற்றி சுத்தத்தைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சுகப்படுத்தவும் அந்நோய் மேலும் பரவாது தடுக்கவும் தேவையான தடுப்பு முறைகளையும் பாதுகாப்பையும் மேற்கொண்டால் அந்த ஆபத்தான நோய் சமூகத்தில் மேலும் பரவாது தடுக்கலாம்; இதுவரை பீடிக்கப்படாத மக்களைப் பாதுகாக்கலாம்.

ஆனால் இவ்விதமான ஒரு பயங்கர நோய் ஏற்பட்ட போது வைத்திய அதிகாரிகள் அதைப் பற்றிக் கவலையின்றி இருந்தால், பாதுகாப்பு வேலைக்குப் பொறுப்பான சுகாதாரப் பகுதி தன் கடமைகளில் அலட்சியமாக நடந்து கொண்டால், அழுக்குகளை அகற்றி சுத்தமாக வைக்கும் கடமையைச் செய்ய வேண்டியவர்கள் அசுத்தம் பெருகுவதைக் கண்டும் வாளாவிருந்தால் நோய்க் கிருமிகள் மிக வேகமாகப் பரவி காற்றிலும், நீரிலும், உணவு வகைகளிலும் கலந்து எங்கும் வியாபித்து எல்லோரினதும் சுகாதாரத்தைப் பாதித்து பேராபத்தான நிலையைத் தோற்றுவித்துவிடும். இந்நிலை ஏற்பட்டபின் சுகதேகிகள் கூட அந்த நோயின் தீங்கிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாமற்போகும். பலவீனர்கள் மட்டுமல்லாது சுகதேகிகள், அந்நோய் பரவாது தடுப்பதற்கு வைத்தியம் செய்யும் மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள் போன்ற எல்லோரிடமும் அது பரவிவிடும். தடுப்பு மருந்துகளை ஏற்றிக் கொண்டவர்கள் கூட தப்பித்துக் கொள்ள முடியாத பயங்கரமான நிலை ஏற்படும். காற்று கெட்டு, நீர் அசுத்தமடைந்து, நிலமெங்கும் அழுக்கு நிறைந்து, உணவு தானியங்களும் பழுதடைந்தால் எந்தத் தடுப்பு முறைதான் பயன்தரப் போகிறது!

தீயோரின் செயல்களால் நல்லோருக்கும் தண்டனை

நம்பிக்கைகளும், ஒழுக்க பழக்க வழக்கங்களும், நடத்தைகளும் கெட்டுப்போவதுகூட இதைப்போன்றதாகும். ஒரு சமூகத்தின் அறிஞர்கள் தாம் அதன் வைத்தியர்கள். ஆட்சியாளரும் அதிகாரிகளும் அதன் சுகாதாரப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள். ஈமானும், சமூகத்தில் நிலவும் சூழலும், காற்று, நீர், உணவுப் பொருட்கள் என்பவற்றின் இடத்தை வகிப்பவை. நன்மையை வளர்த்து தீமையை ஒழிக்க முயற்சிப்பது என்பது, ஒரு சமூகத்தைப் பொறுத்தவரை, அதன் உறுப்பினர்களின் உடல் நலனைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் சுத்திகரிப்பு செயல்களையும் சுகாதார நடவடிக்கைகளையும் போன்றது. எனவே ஒரு சமூகத்தின் அறிஞர்களும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் தங்களின் முக்கியமான கடமையான நன்மையை வளர்த்து தீமையை ஒழிக்கும் பணியைப் புறக்கணித்து சமூகத்தில் தீமைகள் வளர்வதைக் கண்டும் வாளாவிருந்தால், அதன் உறுப்பினர்சளிடையே ஒழுக்கக் குறைவும் வழிகேடும் பாபச் செயல்களும் படிப்படியாக வளர்ந்து அவற்றின் காரணமாக அவர்களிடையே ஈமானின் உணர்வு இல்லாமல் போகும். இறுதியாக சமூகத்தின் சூழலே கெட்டுப்போய் அங்கு நன்மையான செயல்களுக்கு இடமில்லாதாகி தீமைகள் வளர்வதற்கு உரமூட்டும் ஒரு பயங்கரச் சூழல் உருவாக ஆரம்பிக்கும்.

இந்தப் பயங்கர நிலை ஏற்பட்டுவிட்டால் மக்கள் நற்பண்புகளையும் நன்னடத்தைகளையும் மறந்து தீய பண்புகளை வளர்த்து கெட்ட செயல்களைச் செய்யும் துணிவைப் பெறுவார்கள். சமூகத்தின் அறவுணர்வு தலைகீழாக மாறிவிடும். எனவே அவர்களால் நல்லவை தீயவையாகவும், தீயவை நல்லவையாகவும் கருதப்படும். இதனால் அவர்களிடையே தீமைகளும் வழிகேடும் வியாபிக்கும்; நற்பண்புகளையும் நன்னடத்தைகளையும் ஆதரிக்கும் எந்தத் தூண்டுதலும் அங்கு காணப்படமாட்டாது. அந்த சமூகம் என்ற பூமியில் காணப்

படும் காற்று, நீர், உணவுப் பொருட்கள் அனைத்துமே திமைகளையும் பாபச் செயல்களையும் வளர்ப்பதற்காக உபயோகிக்கப்படும் ஒரு நிலை அங்கு தோன்றிவிட்டால் நற்பண்புகளையும், உயர்ந்த கொள்கைகளையும், தூய நடத்தைகளையும் வளர்ப்பதற்காக அந்தப் பூமியிலிருந்து காற்று, நீர் உணவுப் பொருட்கள் போன்ற ஒன்றுமே கிடைக்காமற் போகும். இவ்விழி நிலையை அடையும் எந்தச் சமூகமும் நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனைக்குரியதாகிவிடும். அந்தச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் எவருமே - பள்ளிகளிலும் ஸாவியாக்களிலும் தங்கி இரவு பகலாக இறைவணக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்கூட - இறைவனின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு பரிதாபகரமான நிலையை அந்தச் சமூகம் அடைந்துவிடும்.

இறைவாக்கு

‘‘உங்களில் அக்கிரமம் செய்தவர்களுக்கு மட்டும் குறிப்பாக ஏற்படாது (உங்கள் அனைவருக்குமே ஏற்படக்கூடிய) வேதனையைப்பற்றி நீங்கள் பயந்து கொள்ளுங்கள்’’ (8:25) என்ற இறைவசனம் இந்தப் பயங்கர நிலைபற்றியே குறிக்கிறது.

‘‘உங்களுக்கு மத்தியில் தீமைகள் செய்யப்படுவதை நீங்கள் சகித்துக்கொண்டிருக்கக் கூடாது. அவற்றை ஒழிக்க நீங்கள் முயலவேண்டும். இல்லாவிட்டால் அல்லாஹ் உங்களையும் சேர்த்தே தண்டிப்பான்’’ என்பதே மேற்படி குர்ஆன் வசனத்தின் கருத்தாகும் என்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘‘ஒரு சமூகத்தில் உள்ள சிலர் செய்யும் தீமைகளுக்காக அல்லாஹ் அந்தச் சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையுமே தண்டிப்பதில்லை. ஆனால் அந்தச் சிலர் செய்யும் தீமைகளையும் தடுக்கும் ஆற்றல் சமூகத்தில் உள்ளவர்களுக்கு இருந்து அவர்கள் அவற்றைத் தடுக்காவிட்டால் ஒரு சிலர் செய்த தீமைகளுக்காக அல்லாஹ் எல்லோரையுமே தண்

டிப்பான்'' என்ற ஹதீஸ் நாம் மேலே காட்டிய திருமறை வசனத்தின் கருத்துக்கு மேலும் விளக்கமாக அமைந்துள்ளது.

ஒரு சமூகத்தின் நற்குண நல்லொழுக்கத்தையும் சன்மார்க்க நடத்தையையும் பாதுகாப்பதற்கு அவசியமான அம்சங்களுள் பிரதானமானவைகளாகத் திகழ்பவை, அதன் உறுப்பினரிடையே காணப்பட வேண்டிய ஈமானின் உறுதியும் அற உணர்வுமாகும். இவற்றை நாயகம் (ஸல்) அவர்கள் ''ஹயா'' என்ற ஒரே சொல்லில் குறிப்பிட்டுள்ளார்கள். ''ஹயா'' என்பது உண்மையாகவே ஈமானின் ஒரு பகுதியாகும். ''ஹயா'' ஈமானில் உள்ளது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். ''ஹயா'' ஈமானின் ஒரு பகுதியாகுமா என்று ஒருவர் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு ''(தீன்) சன்மார்க்கம் என்பதே அதுதானே'' என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

''ஹயா'' என்றால் தீமைகளையும் பாபமான காரியங்களையும் குறித்து உள்ளத்தில் ஏற்படும் ஒருவித வெறுப்புணர்வாகும். இந்த உணர்வுள்ளவன் தன்னளவில் பாவத்தை விரும்பாதவனாக மட்டும் இருக்கமாட்டான். தீய செயல்களைப் பிறரிடம் காண்பதைச் சகிக்காதவனாகவும் கண்ணெதிரே பாபமான காரியங்களும் தீய செயல்களும் அநியாயங்களும் நடப்பதைக் கண்டு சகித்துக்கொண்டு சும்மா இருக்க முடியாதவனாகவுமே அவன் இருப்பான். அவனெதிரே பாபச் செயல்கள் நடந்தால் அவனது சமய, அற உணர்வு கிளர்ந்து எழும். தன் கரங்களால் அல்லது நாவால் அவற்றைத் தடுக்க அவன் முற்படுவான்; அல்லது குறைந்த பட்சம் தன் மனத்தால் அவற்றை வெறுப்பான். அத்தகைய தீமைகளை ஒழித்துக் கட்டவேண்டுமே என்று எண்ணுவான்.

''தீமைகள் எதுவும் செய்யப்படுவதை உங்களில் எவரேனும் கண்டால், அவர் அதைத் தன் கரங்களால் அகற்ற வேண்டும். அதற்கு முடியாவிட்டால் தன் நாவால் அதை

ஒழிக்க முயலவேண்டும். அதற்கும் இயலாதவிடத்து தன் மனத்தாலாவது அதை வெறுக்க வேண்டும். இதுவே ஈமானில் மிகக் குறைந்த நிலை'' என்று ரசூல் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு இதைத்தான் கூறிச்சென்றார்கள்.

உன்னத சமூகத்தின் தோற்றம்

நாம் மேலே கூறிய பண்புகளையுடைய அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சமூகம் தனது சமயம் அழிந்துவிடாமலும் தனது உறுப்பினர்களின் ஒழுக்கப் பண்பாட்டு உணர்வுகள் குன்றிவிடாமலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றலை உடையதாக எக்காலமும் இருந்துவரும். ஏனெனில் இப்படியான ஒரு சமூகத்தில் அதன் ஒவ்வோர் உறுப்பினரும் மற்றவர்களின் பாதுகாவலராகவும் அவர்களின் நலனில் அக்கறையுள்ளவராகவும் இருப்பார். இதன் காரணமாக அச்சமூக அமைப்பில் தீமைகள் தலைகாட்ட எவ்வித வாய்ப்பும் இராது.

தனக்காகவும் தன் சமூகத்துக்காகவும் தன்மீது சுமத்தப் பட்டுள்ள பொறுப்புகளைப் பற்றிய உணர்வும், எவ்வித பிரதிபலனையோ ஊதியத்தையோ எதிர்பாராது தன் கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும் என்ற உயர்ந்த பண்பும் நிறைந்த உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உன்னதமான சமூகத்தைத் தோற்றுவிப்பது திருக்குர்ஆனின் இலட்சியமாகும். ''(விசுவாசிகளே!) அவ்வாறே நடு நிலையான சமுதாயத்தவராகவும் நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே, நீங்கள் (மற்ற) மனிதர்களுக்கு (வழிகாட்டக்கூடிய) சாட்சிகளாக இருங்கள். (நம்முடைய) தூதர் உங்களுக்கு வழிகாட்டக்கூடிய) சாட்சியாக இருப்பார்'' (2:143) என்ற குர்ஆன் வசனம் நாம் மேலே கூறிய அதன் அடிப்படை இலட்சியத்தையே விளக்குகிறது.

கட்டாயக் கடமை

நன்மையை நிலைநாட்டி தீமையை ஒழிக்கப் பாடுபடுவது முஸ்லிமான ஆண், பெண் ஒவ்வொருவர் மீதும் கட்டாயக்

கடமையாகும் என்றும், இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காகவே முஸ்லிம் சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதென்றும், திருக்குர்ஆனின் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் சில வருமாறு:-

"(விசுவாசிகளே) நன்மையான காரியங்களைச் செய்யும்படி மனிதர்களை) ஏவி, பாபமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி, மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கின்ற நீங்கள் தாம் மனிதர்களில் தோன்றிய சமுதாயங்களில் எல்லாம் மிக்க மேலானவர்கள்." (3: 110)

"விசுவாசிகளான ஆண்களும் பெண்களும் தாம் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் (மற்றவரை) நன்மை செய்யும்படி தூண்டி பாபம் செய்யாது தடுப்பார்கள்; தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தும் கொடுப்பார்கள்; அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பார்கள்." (9: 71)

"நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவுவோரும் பாபமான காரியங்களை விலக்குவோரும் அல்லாஹ்வுடைய வரம்புகளைப் பேணி நடப்போரும்..." (9 : 112)

"அவர்கள் எத்தகையோர் எனில் நாம் அவர்களுக்கு பூமியில் ஆதிக்கம் கொடுத்தால் அவர்கள் தொழுகையைக் கடைப்பிடிப்பார்கள்; ஸக்காத் கொடுப்பார்கள்; நன்மையான காரியங்களை ஏவி பாபமான காரியங்களைத் தடை செய்வார்கள்." (22: 41)

இந்தத் திருமறை வசனங்களில் கூறியபடி முஸ்லிம்கள் நடப்பார்களாயின் அவர்களின் நிலை, சுகத்தைப் பாதுகாப்பதில் சிரத்தையும், சுகாதாரத்தைப் பேணுவதில் ஊக்கமும் கொண்ட, தன் உடலையும் தன் வீட்டையும் மட்டுமல்லாது எல்லா இடங்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்ற கவலையும் கவனமும் உடைய மக்கள் வாழும் ஓர்

ஊரின் நிலையை ஒத்ததாக இருந்திருக்கும். இப்படியான மக்கள் வாழும் ஓர் ஊரில் வீசும் காற்று, நோய்க் கிருமிகள் கலக்காத தூய்மையானதாகவே எப்போதும் இருந்துவரும்; அவ்வூரில் வாழும் எல்லோருமே சுகதேகிகளாக இல்லாது அவர்களிடையே ஒரு சில நோயாளிகள் இருந்தாலும் அவர்களால் அவ்வூர் மக்கள் அனைவரினதும் நலன் அவ்வளவு தூரம் பாதிக்கப்படமாட்டாது. ஏனெனில், அங்கு நோயாளர்கள் கேள்வி பார்வையின்றி விடப்படமாட்டார்கள். அவர்களுக்கு அவசியமான பரிகாரம் செய்யப்படும். எனவே ஒரு சிலரிடம் காணப்படும் நோய்கள் அந்த நோயினால் பீடிக்கப்பட்ட தனிமனிதர்களைப் பாதிக்குமேயன்றி அவ்வூர் மக்கள் எல்லோரையும் பாதிக்கும் ஓர் ஆபத்தான நோயாக ஆகமாட்டாது.

ஒரு குழுவாவது வேண்டும்

முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருமே இவ்வுயரிய பண்புள்ளவர்களாக இராவிட்டாலும் சமூகத்தின் குண நலன்களையும் கொள்கை கோட்பாடு, சமய கலாசார நடத்தைகளையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுழைக்கும் ஒரு குழுவாவது முஸ்லிம்களுக்கு மத்தியில் கட்டாயமாக இருக்கவேண்டும். "(விசுவாசிகளே) உங்களில் ஒரு கூட்டத்தார் தோன்றி அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பால் அழைத்து நல்லதை ஏவித் தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்கிக் கொண்டுமிருக்கவும்" (3:104) என்ற குர்ஆன் வசனம் நாம் கூறிய கருத்துக்கு ஆதாரமாக உள்ளது.

உலமாக்களையும் அறிஞர்களையும் அதிகாரிகளையும் கொண்ட "ஒரு குழுவையே ஒரு கூட்டம்" என்று இங்கு குறிப்பிட்டுள்ளது எனலாம். ஒரு கிராமத்தின் சுகாதாரத்துறை அதிகாரிகள், அக்கிராமத்து மக்கள் அனைவரின் சுகாதார விடயங்களிலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது கடமையாகும். அதே போன்று முஸ்லிம்களுக்கு மத்தியில் உள்ள உலமாக்களும் அறிஞர்களும் அதிகாரிகளும் சமூகத்தில் நன்மையை வளர்த்து, தீமையை ஒழிப்பதில்

கவனஞ் செலுத்தி இப்பணியில் அயராது உழைப்பது கடமையாகும். கிராமத்தின் சுகாதாரத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் அவ்வதிகாரிகள் உட்பட அக்கிராம மக்கள் அனைவருமே நோயினால் துன்புற நேரிடும். அவ்வாறே முஸ்லிம் சமூகத்தின் நன்மையை வளர்த்து தீமையை ஒழிக்கும் மகத்தான பணிக்குப் பொறுப்பான உலமாக்களும் அறிஞர்களும் தலைவர்களும் தங்கள் கடமையில் தவறினால் அவர்களும், சமூகமும் கடைநிலை அடைய வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும்.

பொறுப்புகளைத் தட்டிக்கழிக்கும் அறிஞர்களும் தலைவர்களும்

நமக்கு முன்னர் வாழ்ந்த சமூகங்களின் அறிஞர்களும் தலைவர்களும் இந்தக் கடமையில் தவறிய காரணத்தால்தான் அவர்கள் வாழ்ந்த சமூகங்களே அழிந்தன. ''உங்களுக்கு முன்னிருந்த சந்ததிகளில் (தாங்களும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து மற்ற மனிதர்களும்) பூமியில் விஷமம் செய்யாது தடுத்து வரக்கூடிய அறிவாளிகள் (அதிகமாக) இருந்திருக்க வேண்டாமா? அவர்கள் சொற்பமானவர்களாகவே இருந்தனர். நாம் அவர்களை இரட்சித்துக் கொண்டோம்'' (11: 116)

'அவர்கள் (பொய் சொல்லி) பாவமான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்தும் விலக்கப்பட்டவைகளை விழுங்குவதிலிருந்தும் (அவர்களின் பண்டிதர்களாகிய) ரிப்பிய்யூன்களேனும் (பாதிரிகளாகிய) அஹ்பார்களேனும் அவர்களைத் தடை செய்ய வேண்டாமா?'' (5: 63) என்ற மறைவசனங்கள் ஒரு சமூகத்தின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அதன் அறிஞர்களும் அதிகாரிகளும் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்த்துகின்றன.

எனவே, முஸ்லிம் சமூகத்தில் உள்ள உலமாக்களும் ஷைகுமார்களும், அதிகாரிகளும், தலைவர்களும் தங்களின்

மகத்தான பொறுப்புக்களை உணர்ந்து செயலாற்ற வேண்டியது அவர்களின் கடமையாகும். அல்லாஹ், இவர்களிடம் அவர்களின் நடத்தையைப் பற்றி மட்டும் விசாரணை செய்ய மாட்டான். சமூகம் முழுவதன் நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் பெருமளவு பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இஸ்லாத்தை உதறிவிட்டு வாழும் தலைவர்களையோ அக்கிரமம் புரிந்துவரும் அதிகாரிகளையோ இவர்களுக்கு வால்பிடிக்கும் அறிஞர்களையோ, ஷைகுமார்களையோ, உலமாக்களையோ பற்றி நாம் இங்கு கூறவில்லை. இவர்களுக்கு மறுமையில் இறைவன் தக்க தண்டனை அளிப்பான். மார்க்க பக்தியுள்ளவர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டு பள்ளிவாயில்களிலும், ஸாவியாக்களிலும், தக்கியாக்களிலும் தங்கள் இல்லங்களிலும் தங்கியிருந்து இறை வணக்கத்திலும் ஆன்மீகப் பயிற்சியிலும் இரவு பகலாக தங்கள் நேரத்தைச் செலவிடுகின்ற உலமாக்கள், ஷைகுமார்கள் முதலானோரையே நாம் இங்கு குறிப்பிடுகின்றோம். சமூகத்தை நோக்கி வழிகேடு என்ற பிரளயம் நாலாபக்கங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கும் போது, உலமாக்களும், ஷைகுமார்களும், தலைவர்களும் சமூகத்தையே மூழ்கடிக்கப்பார்க்கும் இந்தப் பிரளயத்தைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்காது ஒரு மூலையில் ஒதுங்கி சில குறிப்பிட்ட வணக்கங்களில் தம்மை மறந்து லயித்து இருப்பதுதான் இவர்களின் கடமையா? முஸ்லிம்களை எதிர் நோக்கியுள்ள பேராபத்துக்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக விழித்தெழுவதும் இறைவன் தங்களுக்கு அளித்துள்ள எல்லாவிதமான ஆற்றல்களையும் செல்வாக்கையும் இதற்காக உபயோகித்து அயராது உழைப்பதும் இந்த உலமாக்கள், ஷைகுமார்கள், தலைவர்கள் ஆகியோரின் கடமையல்லவா?

என்ன சொல்லப் போகிறார்கள்?

சமூகத்தை எதிர்நோக்கியுள்ள பேராபத்துக்களையெல்லாம் ஒழித்துக்கட்டியே ஆகவேண்டும் என்பது இவர்களின் கடமையல்ல என்பது உண்மைதான். ஆனால் அந்த ஆபத்

துக்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக தங்களால் முடிந்த அளவு பாடுபடுவது இவர்களின் கடமை என்பதில் ஐயமில்லை. தங்களின் இந்தக் கடமைகளைப் புறக்கணித்து விட்டு சில குறிப்பிட்ட வணக்க வழிபாடுகளிலும் ஆன்மீகப் பயிற்சிகளிலும் மூழ்கியிருந்தால் மறுமைநாளில் இவர்கள் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. பொது மக்களின் சுகாதாரத்துக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் தங்கள் கடமைகளைப் புறக்கணித்து விட்டு, தங்கள் உடலையும் இல்லங்களையும் மட்டும் பாது காப்பதில் கவனஞ் செலுத்தினால் நாட்டில் தொற்றுநோய் பரவாதிருக்குமா? அவ்வாறு நோய் பரவியவிடத்து அதற் கான குற்றம் யாரைச் சாரும்? சுகாதாரத்துக்குப் பொறுப் பான அதிகாரிகளையல்லவா? அவர்கள் தங்களின் உடலையும் உடைகளையும் வீடுகளையும் சுத்தமாகவே வைத்திருக்கிறார் கள் என்பதால் அவர்கள் நிரபராதிகளாவார்களா? சமூகத் தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் பொறுப்பான உலமாக்களும் ஷைகுமார்களும் அதிகாரிகளும் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

சமூகத்துக்காக தங்கள் மீதுள்ள பொறுப்புக்களையெல் லாம் உதறித்தள்ளிவிட்டு தங்களின் ஆன்ம விமோசனத்துக் காக மட்டும் பாடுபட்டால் அல்லாஹ்விடம் தப்பிவிடலாம் என்று இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்களா? சமூகத்தின் உயர்வுக்காக இவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளை இவர் கள் நிறைவேற்றியே ஆகவேண்டும். உலமாக்களும் ஷைகு மார்களும் தலைவர்களும் தங்கள் பங்கை சரிவர நிறை வேற்றாவிட்டால் சமூகம் வீழ்ச்சியுறுவது தவிர்க்கமுடியாத தாகும். முழுச் சமூகத்தின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரண ஸ்தர்களாக இவர்கள் இருந்தார்கள் என்பதற்காக இறை வன் நிச்சயமாகவே இவர்களை விசாரிப்பான். அப்போது இவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

சமுதாயங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்

அரசியல், வர்த்தகம், கைத்தொழில், கலை, விஞ்ஞா னம் போன்ற பல்வேறு துறைகளிலும் மேல்நாட்டு மக் கள் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தைக் கண்டு மற்ற சமுதாயத்து மக்கள் மலைத்துவிடுகிறார்கள். அவர் களின் இம்முன்னேற்றம் நிலையானதும் அழிவற்றதுமாகும் என்றும் முழு உலகமும் அவர்களின் ஆதிக்கத்துக்குட்படு வது தவிர்க்க முடியாததும் நியாயமானதுமாகும் என்றும் இம்மக்கள் கருதிவிடுகிறார்கள். "உலகில் ஆட்சி அதிகார மும், இயற்கை வளங்களை உபயோகிக்கும் உரிமையும் மேல் நாட்டு மக்களின் ஏகபோக உரிமைகளாகும். எனவே அவர் களின் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் அழிக்க வேறு எந்தச் சக்தியாலும், எந்தச் சமுதாயத்தாலும் முடியாது" என்றும் இவர்கள் நினைத்துவிடுகிறார்கள்.

ஒவ்வொரு காலத்திலும், அந்தக் காலத்தில் உயர்நிலை யில் இருந்த சமுதாயங்களைப் பற்றி மற்ற மக்கள் இப்படித் தான் கருத்துக் கொண்டு இருந்தார்கள். எகிப்தில் பிர் அவ்ன்கள், அரேபியாவில் "ஆத்" "ஸமூத்" என்ற இரு வர்க்கத்தவர்கள், ஈராக்கில் கல்தானியர்கள், பாரசீகத்தில் அந் நாட்டு மன்னர்கள், கிரேக்க நாட்டுப் படைவீரர்கள், உல கையெல்லாம் கட்டி ஆண்ட உரோம சக்ரவர்த்திகள் ஆகிய அனைவரும் இப்பூமியில் ஆட்சியும் அதிகாரமும் செலுத்தி

வந்துள்ளார்கள். தற்காலத்தில் மேல்நாட்டு மக்கள் தமது செல்வம், செல்வாக்கு, அதிகாரம், ஆட்சி முதலியவற்றால் முழு உலகையும் ஆட்டிப்படைத்து வருவதுபோல, மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பாரும் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலத்தில் அக்கால உலகில் அதிகாரம் செலுத்தி வந்துள்ளார்கள். அவர்களின் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் கண்ணுற்ற ஏனைய சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள், இவர்களின் அதிகாரத்தை அழித்து செல்வாக்கை இல்லாமற் செய்யவே முடியாது என்றுதான் கருதினார்கள்.

ஆனால் அவர்களின் ஆதிக்கத்தின் மறைவுக்கு எல்லாம் வல்ல இறைவன் வகுத்த காலம் வந்தபோது அது அழிந்து ஒழிந்தது. பல சமுதாயத்தவர்கள் இருந்த இடமே தெரியாது மறைந்தனர். மற்றும் சிலர் நேற்றுவரை தங்களின் அதிகாரத்தில் வாழ்ந்த மக்களின் அடிமைகளாகவும் அவர்களால் ஆளப்படுவோர்களாகவும் மாறினர். "உங்களுக்கு முன்னரும் (இத்தகைய) பல வழி முறைகள் சென்றிருக்கின்றன. (ஆகவே) நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (இறைவனுடைய வசனங்களைப்) பொய்யாக்கியோரின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைப் பாருங்கள்." (அல் குர்ஆன் 3: 137)

தேங்கிக்கிடக்காது

இவ்வுலகம் எவ்வித மாற்றமுமின்றி என்றும் ஒரேநிலையில் தேங்கிக் கிடப்பதில்லை; எப்பொருளையும் ஒரே நிலையில் என்றும் வைத்திருக்காது நிலைமாறச் செய்யும் மாற்றமும் சுழற்சியும் என்றுமே காணப்படுகின்றன. இது இயற்கை நியதி. ஆக்கத்தைத் தொடர்ந்து அழிவும், நிர்மாணத்தின் பின் நிர்மூலமும், கோடையின் பின் மாரியும், உயர்ச்சியை அடுத்து வீழ்ச்சியும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. ஒரு விதை; அது காற்றில் அடிபட்டு அங்குமிங்கும் அலைந்து திரிகின்றது. நாளை அது ஓரிடத்தில் வேறூன்றி முளைத்து விடுகிறது. சில நாட்களில் அதே விதை பல கிளைகளை உடைய ஒரு பெரிய மரமாகிக் கனி தருகிறது. சொற்ப காலத்துக்குப் பிறகு அம்மரம் பட்டுவிடுகிறது. அதன் இலைகளும் கிளைகளும் மற்றோர் விதை முளைப்பதற்கு உதவும் எருவாக மாறிவிடுகின்றன. இதுதான் இயற்கை நியதி.

ஆனால் ஏதாவது ஒரு பொருள் நீண்ட நாட்களுக்கு ஓரே நிலையில் இருப்பதைக் கண்ணுறும் மக்கள் அப்பொருள் என்றும் அதே நிலையிலேயே இருந்துவிடும் என்று தவறாக எண்ணிக் கொள்கிறார்கள். ஒரு பொருள் அதன் உயர் நிலையில் இருப்பதை அவர்கள் கண்டால் என்றும் அது அப்படியே இருக்குமென்றும், வேறொன்று அதன் தாழ் நிலையில் இருக்கக் காணும்போது அது என்றும் அதே நிலையிலேயே இருக்குமென்றும் கருதுகிறார்கள். ஒரு பொருள் உயர் நிலையை அடைவதும் பின் அது இழி நிலைக்கு மாறுவதும் மாறி மாறி வரும் இரு நிலைகளாகும். அப்பொருளின் இவ்விரு நிலைகளில் ஒன்றையே அவர்கள் இப்போது கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். "இத்தகைய கஷ்டகாலம் மக்களுள் மாறி மாறி வரும்படி நாம்தான் செய்கிறோம்." (அல்-குர்ஆன்)

உலக நிகழ்ச்சிகள் யாவும் சக்கரம் போன்று சுழன்று மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. பிறப்பும் இறப்பும் வாலிபமும் வயோதிபமும், பலமும் பலவீனமும், மாரியும் கோடையும், வனப்பும் வரட்சியும் அனைத்துமே இந்தச் சுழற்சியின் நிலைகளாகும். இந்த மாற்றத்திற்கேற்ப ஒவ்வொரு பொருளும் அதன் உயர் நிலைக்குரிய காலம் வரும்போது உயர்நிலையை அடைகின்றது. வீழ்ச்சிக்குரிய நேரம் வந்துவிட்டால் வீழ்ச்சியை அடைகின்றது. ஒரு பொருள் அதன் உன்னத நிலையை அடையும் காலம் வரும்போது அது வளர்ந்து வனப்புள்ளதாகி பலமும் உறுதியும் பெற்றுக் காணப்படும். இவ்வாறு அது அதன் உச்ச நிலையை அடைந்துவிடும். அதைத் தொடர்ந்து அதன் வீழ்ச்சியும் ஆரம்பமாகிவிடும். அப்போது அதே பொருள் படிப்படியாக வளர்ச்சி குன்றி வனப்பிழந்து பலவீனமடையும்; இறுதியாக அழிந்து மறைந்துவிடும்.

இயற்கை நியதி

இது சிருஷ்டிப் பொருட்களுக்கு இறைவன் வகுத்துள்ள இயற்கை நியதி. படைப்பினங்கள் அனைத்தும் இவ்விதிக்குக் கட்டுப்பட்டுள்ளன. மனிதனும் இவ்விதிக்கு அடங்கியே உள்ளான். தனிமனிதனுக்குப் போன்றே ஒரு சமுதாயத்துக்கும் இவ்விதி பொருந்துவதாக உள்ளது. எனவே, கண்ணியம், கண்ணியக்குறைவு, இன்பதுன்பம், உயர்ச்சி வீழ்ச்சி போன்ற யாவும் தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவேதான் ஒவ்வொரு தனிமனிதனும், சமுதாயங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரணான இவ்விரு நிலைகளுக்கும் ஆளாகியே தீர்வதை நாம் காண்கிறோம். இந்தச் சுழற்சியிலிருந்து எந்த மனிதனோ சமுதாயமோ தப்ப முடியாது. ஒரு மனிதனோ அல்லது ஒரு சமுதாயமோ என்றைக்குமே இவ்விரு நிலைகளில் ஒன்றில் மட்டும் இருப்பதும் சாத்தியமாகாது. இதற்கு முன் சென்றவர்களுக்கும் அல்லாஹ் ஏற்படுத்திய வழி இதுதான். ஆகவே "(நபியே!) நீர் அல்லாஹ்வுடைய வழியில் யாதொரு மாறுதலையும் காணமாட்டீர்." (அல்குர்ஆன் 33 : 62)

நமக்கு முன்பு வாழ்ந்த சமுதாயத்தவர்கள் விட்டுச் சென்ற சின்னங்களை உலகின் நான்கு கோணங்களிலும் நாம் காண்கிறோம். அவை நமக்கு அவர்களின் நாகரிகப் பண்பாட்டின் எடுத்துக்காட்டுகளாகவும் அவர்களிடமிருந்த பல்வேறு திறமைகளை உணர்த்தும் சான்றுகளாகவும் திகழ்கின்றன. அவற்றை நாம் பார்க்கும் போது, தற்காலத்தில் உன்னத நிலையில் வாழும் சமுதாயத்தவர் அடைந்துள்ளது போன்ற உயர்நிலையை அவர்கள் தங்கள் காலத்தில் அடைந்திருந்தார்கள்; அம்மட்டுமல்ல, அதைவிடவும் மிக்க உயர்நிலையில் அவர்கள் இருந்துள்ளார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். "அவர்கள் உங்களைவிட பலசாலிகளாகவும் (உங்களைவிட) அதிக பொருளுடையவர்களாகவும் அதிக சந்ததி உடையவர்களாகவும் இருந்தார்கள்." (அல்குர்ஆன் 9 : 69)

ஆனால் இறுதியில் அவர்கள் நிலை என்னவாயிற்று? தங்களின் முன்னேற்றத்தைக் கண்டு அவர்கள் மதிமயங்கினார்கள். தங்களிடம் செல்வம் கொழிப்பதைக் கண்டு மருண்டார்கள்; சுகபோகங்களில் மூழ்கித் திளைத்தார்கள்; தங்கள் திறமைகளையும் வெற்றிகளையும் பற்றி மமதையும் செருக்கும் கொண்டார்கள். அதனால் பல்வேறு அக்கிரமங்களைச் செய்யத் தலைப்பட்டார்கள். இறுதியாக பாபமான காரியங்களில் ஈடுபட்டு அவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே தீங்கிழைத்துக் கொண்டார்கள்.

இறைவனின் கோபம்

அவர்கள் இப்படியெல்லாம் அக்கிரமங்களைப் புரிந்து வந்த போதும்கூட இறைவன் உடனடியாக அவர்களைத் தண்டிக்காது விட்டுவைத்தான். சில சமுதாயத்தவர்களை இவ்வாறு பல நூற்றாண்டுகளாகவே விட்டு வைத்தான். ஆனால், அல்லாஹ் அவர்களைத் தண்டிக்காது விட்டு வைத்திருப்பதை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். தங்கள் அக்கிரமத்தைக் குறைத்துக் கொள்ளாது மேலும் மேலும் தீங்கிழைப்பதற்கே இந்தச் சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தங்கள் கெட்டித் தனத்தால் அவர்கள் அல்லாஹ்வையே ஏமாற்றிவிட்டதாகவும் உலகில் ஆட்சியும் அதிகாரமும் தங்களுக்கே உரியது என்றும், எனவே தாங்கள் விரும்பிய எதையும் செய்யலாம்; இறைவன் தங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் அவர்கள் கருதினார்கள்.

அதனால் அவர்கள் மீது இறைவனின் கோபம் பொங்கிற்று. அவர்கள் அவனது அருளை இழந்து தண்டனைக்கு ஆளானார்கள். இத்தோடு அவர்களின் வீழ்ச்சியும் ஆரம்பமாயிற்று.

"(இவ்வாறு) அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். நாமும் ஒரு சூழ்ச்சி செய்தோம். அவர்கள் அதனை உணரவில்லை." (அல்குர்ஆன் 27 : 50)

ஒருவனுக்கு இறைவனின் தண்டனை, புறத்திலிருந்து வருவதில்லை. அது அவனுக்குள்ளிருந்தே ஆரம்பமாகிறது. அது அவனது உள்ளத்தையும் உணர்வுகளையும் சென்றடைந்து தனது வேலையைச் செய்யத் தொடங்கிவிடும். மனிதனின் அறிவு, உணர்வு, சிந்தனை, புலன்கள் அனைத்தையும் பாதித்துவிடும். இதனால் அவனது அகப்பார்வை மழுங்கிப்போகும்: எனவே, அவன் கண்பார்வை உள்ளவனாகத் தோன்றினாலும் அகப்பார்வை இழந்த குருடனாக அவன் மாறிவிடுகிறான். ''நிச்சயமாக அவர்களின் பார்வை குருடாகி விடுவதில்லை. ஆனால் நெஞ்சத்திலுள்ள இருதயங்கள் குருடாகிவிடுகின்றன.'' (அல்குர்ஆன் 22 : 46)

ஒருவனது உள்ளத்தின் ஒளி அணைந்துவிட்டால் அவன் நல்ல திட்டங்கள் என்று வகுக்கும் அனைத்துமே அவன் எதிர்பார்ப்பதற்கு மாறான தீய விளைவுகளைத் தருவனவாக அமைந்துவிடும்; வெற்றிக் கம்பத்தை நாடி அவன் எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டும் அவனைப் படுபாதாளத்துக்கு இட்டுச் செல்லும்; அவனது ஆற்றல்கள் திறமைகள் அனைத்துமே அவனுக்குச் சதிசெய்துவிடும். எனவே இறுதியில் அவனே தனக்கு அழிவைத் தேடிக்கொள்பவனாக மாறிவிடுவான். ''அவர்களின் சூழ்ச்சியின் முடிவு என்னவாயிற்று என்று பாருங்கள். நிச்சயமாக, நாம் அவர்களையும் அவர்களின் சமுதாயத்தவர் அனைவரையும் அழித்துவிட்டோம்.''
(அல்குர்ஆன் 27 : 51)

சிறந்த எடுத்துக்காட்டுகள்

மக்கள் சமுதாயத்தில் உயர்ச்சியும் வீழ்ச்சியும் எங்ஙனம் மாறி மாறி வருகின்றன என்பதற்கு ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததியினர்) பனூ இஸ்ராஈல் (இஸ்ரவேல்) ஆகிய சமுதாயங்களின் வரலாறு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். எகிப்து நாட்டு மக்கள் முன்னேற்றத்தின் உச்சியை அடைந்தபோது வரம்புமீறி நடந்து அட்டகாசம் புரிய ஆரம்பித்தார்கள். நன்றியுள்ள மக்களாக வாழ வேண்டிய அவர்கள் நன்றிகெட்டவர்களாகவும், பஞ்சமா பாதகங்களைப் புரிவோராகவும் மாறினார்கள்; அவர்களின் தலைவனான பிர்அவ்ன், தன்னை மேன்மை மிக்க கடவுள் என்று கூறிக்கொண்டான். அவன் தன்னைக் கடவுளின் இடத்துக்கு உயர்த்திக் கொண்டு, யூசுப் (அலை) அவர்கள் காலத்தில் எகிப்தில் வந்து குடியேறி, இஸ்ரவேலர்களின் வழித்தோன்றல்களாக வாழ்ந்துவந்த சிறுபான்மையினரான இஸ்ரவேலர்களை துன்புறுத்தினான். அவர்களுக்கு பலவாறு அநீதி இழைத்தான். பிர்அவ்னுடையவும், அந்நாட்டுப் பழங்குடிகளான எகிப்தியர்களதும் அக்கிரமம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

எனவே, அக்கிரமக்காரர்களான இவர்களின் அதிகாரத்தை ஒழித்து அநீதிக்கு ஆளான இஸ்ரவேலர்களை உயர்வடையச் செய்யவேண்டும் என்று இறைவன் நாடினான். இஸ்ரவேலர்கள் மத்தியில் மூஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் பிர்அவ்னின் கண்காணிப்பின் கீழ் அவனது மாளிகையிலேயே வளர வேண்டுமென்று இறைவன் விரும்பினான். அங்ஙனமே அவர்கள் வளர்ந்து வந்தார்கள். பின்னர் அல்லாஹ் அவர்களைத் தனது தூதராகத் தெரிந்து கொண்டான்.

எகிப்துநாட்டு மக்களின் அடிமைத்துவத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுதலை அடையச் செய்யவேண்டிய பொறுப்பை மூஸா (அலை) அவர்களிடம் இறைவன் ஒப்படைத்தான். மூஸா (அலை) அவர்கள் தனக்கு இறைவனிடமிருந்து கிடைத்த சத்திய போதனைகளை பிர்அவ்னுக்கு மிக அழகிய முறையில் எடுத்துக் கூறினார்கள். ஆனால் அவன் அதை ஏற்க மறுத்தான். அவனது சமுதாயத்தவர்களும் இப்படியே நடந்து கொண்டார்கள். எனவே பிர்அவ்னையும் அவனது சமுதாயத்தவர்களையும் இறைவன் ஒன்றன்பின் ஒன்றாக பல முறை எச்சரித்தான். அவர்கள் நாட்டில் வறுமையை ஏற்படுத்தினான்; பெரு வெள்ளத்தில் புரண்டோடச் செய்தான். இரத்தத்தை அவர்கள் மீது இறக்கினான். வெட்டுக் கிளியைப் படைத்து அவர்களின் பயிர்ப்பச்சைகளை அழித்தான். தவளை, பேன் ஆகியவற்றைப் பெருமளவில் சிருஷ்டித்து அவர்களைத் துன்புறுத்தினான்; ஆனால் இவை அனைத்தும் ஏற்

பட்டும் அவர்கள் அக்கிரமம் புரிவதையும் தகாத காரியங்கள் செய்வதையும் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் மமதையையும் செருக்கையும் விட்டு விடவில்லை. ''அவர்கள் கர்வம் கொண்டார்கள். அவர்களோ பாவிகளான ஒரு சமூகத்தவராவர்.'' (அல்குர்ஆன் 7 : 133)

பலவித தண்டனைகளைப் பெற்றும் அவர்கள் திருந்தாததால் இறைவனின் இறுதியான தண்டனை அவர்கள் மீது இறங்கியது; அல்லாஹ்வின் ஆணைப்படி மூஸா (அலை) தன்னைப் பின்பற்றிய மக்களை அழைத்துக் கொண்டு எகிப்தை விட்டும் வெளியேறிச் சென்றார்கள்; பிர்அவுனும் அவனைப் பின்பற்றிய மக்களும் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டார்கள். எகிப்து நாட்டுப் பழங்குடி மக்களின் - பிர்அவ்னின் கட்சியினரின் அதிகாரம் முற்றாகவே மறைந்து ஒழிந்தது. ''எனவே நாம் அவனையும் அவனது சமுதாயத்தவர்களையும் தண்டித்தோம். அவர்களைக் கடலில் எறிந்தோம். அக்கிரமக்காரர்களின் இறுதி முடிவு என்னவாயிற்று என்று நீங்கள் ஆராய்ந்து பாருங்கள்.''
(அல்குர்ஆன் 28 : 40)

இஸ்ரவேலர் சகாப்தம்

அதைத் தொடர்ந்து இஸ்ரவேலர்களின் சகாப்தம் ஆரம்பமாயிற்று. இவர்கள் எகிப்து நாட்டுப் பழங்குடிகளை வென்றார்கள்; உலகின் உண்மை எஜமானனும் அதிபதியுமான இறைவன் அந்நாட்டு ஆட்சியையும் இவர்களிடம் ஒப்படைத்தான்; அக்கால உலகில் வாழ்ந்த மற்றச் சமுதாயங்கள் அனைத்தையும்விட இஸ்ரவேலர்களை அவன் மேன்மைப்படுத்தி வைத்தான். ஆனால் உலகில் இவ்விதம் அதிகாரத்தைப் பெறுவதும் மேம்பாடடைவதும் பயன்தரும் நற்கமருங்களைப் புரிவதில் தங்கியுள்ளது. இறைவன் இதை மூஸா (அலை) அவர்கள் மூலம் இஸ்ரவேலர்களுக்கு அறிவித்தான். அவர்கள், ''இறைவன் உங்களுக்கு அதிகாரத்தைத் தந்து நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று உங்களைப் பரிசோதிக்கப் போகிறான்'' என்று கூறி தம் மக்களை எச்சரித்தார்கள். இது இஸ்ரவேலர்களுக்கு மட்டும் இடப்பட்ட ஒரு நிபந்தனையல்ல. உலகில் அதிகாரம் கிடைக்கப் பெறும் சமுதாயங்கள் அனைத்துச்கும் இது பொருந்தும்.

இஸ்ரவேலர் அல்லாஹ்வுக்கு மாறு செய்யத் தலைப்பட்டார்கள். அல்லாஹ்வின் வேத வசனங்களை மாற்றியமைத்தார்கள்; சத்தியத்தை மறைத்துவிட்டு அசத்தியத்தைப் பின்பற்றி நடந்தார்கள்; பொய், புரட்டு, மோசடி, ஹராமானவற்றை உண்ணல், வாக்குமாறல் போன்ற இழிவான செயல்களைச் செய்தார்கள்; பணம் காசுக்கு அடிமைகளாகவும், பேராசை பிடித்தவர்களாகவும், கோழைகளாகவும், சுகபோக வாழ்வை விரும்பும் சோம்பேறிகளாகவும் மாறினார்கள்; தங்கள் பால் இறைவனால் அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள் பலரைக் கொலை செய்தார்கள். சத்தியத்தைப் போதிப்போரைத் துன்புறுத்தினார்கள். சீரிய வாழ்க்கை முறையின்பால் அழைத்த தலைவர்களை புறக்கணித்து வழிகேட்டில் இட்டுச் சென்ற தலைவர்களைப் பின்பற்றினார்கள்.

இவ்வாறெல்லாம் நடந்து இஸ்ரவேலர் இழி நிலைக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டபோது அவர்கள் இறைவனின் கோபத்துக்குள்ளானார்கள். இறைவனின் அருள் அவர்களுக்குக் கிடைக்காமல் போயிற்று. அவர்களிடமிருந்து ஆட்சியும் அதிகாரமும் பறிக்கப்பட்டன. அவர்களின் கண்ணியமும் மதிப்பும் குறைந்தது. ஈராக் தேசத்தின் அதிகாரிகளாலும் உரோம தேசத்துத் தலைவர்களாலும் அவர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள். இறுதியாக அவர்கள் வாழ்ந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டார்கள். இதனால் அல்லலுற்று அங்குமிங்கும் அலைந்து சிதறி வாழ நேர்ந்தது. அமைதியான ஆட்சியை அவர்களால் இனி என்றுமே நிறுவ முடியாது என்ற நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டது. பல்லாயிரம் வருடங்களாகவே, தங்களுக்கென்று ஓர் ஆட்சியை நிறுவி அதன் கீழ் அவர்கள் அனைவரும் அமைதியாக வாழ முடியாதிருப்பதன் காரணம் அவர்கள் மீது இறைவனின் சாபம் ஏற்பட்டுவிட்டதாகும்,

அழிவுப் பாதையில் வேகமாகச் செல்லும் மேனாட்டுச் சமுதாயங்கள்

இறைவன் வகுத்த இவ்வியற்கை நியதி இன்றும் செயல்படுவதை நாம் பார்க்கிறோம். கடந்த காலங்களில் வாழ்ந்த மக்கள் தம் தீயசெயல்களின் பலனாக அடைந்த அதே இழிநிலையை அடையும் நிலையில் இன்று மேல்நாட்டு மக்கள் இருந்து வருகிறார்கள். இம்மக்கள், கடந்த காலங்களில் வாழ்ந்த மக்களைப்போன்று பன்முறை அச்சுறுத்தப்பட்டார்கள். உலக யுத்தங்களால் ஏற்பட்ட அனர்த்தங்களும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதும், சோம்பி இருப்போரின் தொகை பெருகுவதும், பயங்கர நோய்கள் மிகவேகமாகப் பரவி வருவதும், குடும்ப வாழ்வில் அமைதி குலைந்து காணப்படுவதும் இவர்களுக்கு விடப்பட்ட எச்சரிக்கைகளாகும். இவற்றைப் பற்றி அவர்கள் சிந்தனைசெய்து பார்த்தால், தங்களின் அட்டூழிய அட்டகாசங்களின் காரணமாகவும், சத்தியத்தைப் புறக்கணித்து தம் மனோ இச்சைப்படி வாழ முற்பட்டதாலுமே இவை அனைத்தும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன என்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இவற்றால் அவர்கள் உணர்ச்சிபெறத் தவறிவிட்டார்கள். எனவேதான் இப்போதாவது அவர்கள் சீரியவழியில் செல்லத் துணியவில்லை. தங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை அவர்கள் அறிகிறார்கள். அவற்றை நீக்க வழி யாது என்று ஆராய்ந்து பரிகாரம் தேடவும் செய்கிறார்கள். ஆனால் நோயின் அடிப்படைக் காரணத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நோய் எப்படி ஆரம்பமாயிற்று என்று ஆராய்ந்து கண்டுபிடித்து மருந்து செய்வதை விட்டுவிட்டு வெளியில் தோன்றும் நோயின் அறிகுறிகளுக்குப் பரிகராம் செய்து காலத்தை விரயம் செய்கிறார்கள். இதனால் நோய் தீருவது எப்படிப் போனாலும் அது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவற்றையெல்லாம் நோக்கும்போது மேல்நாட்டுச் சமயத்தவர்களுக்கும் எச்சரிக்கைக்

குரிய காலம் முடிந்தது; அவர்களின் முடிவு காலம் மிக அண்மித்து வருகிறதென்று தோன்றுகிறது.

இரு ஷைத்தான்கள்

மேல்நாட்டு மக்கள் பலம்பொருந்திய இரு ஷைத்தான்களின் கோரப்பிடியில் சிக்கியுள்ளார்கள். அவை அவர்களை அழிவுப்பாதையில் மிகத் துரிதமாக இட்டுச் செல்கின்றன. குடும்பக் கட்டுப்பாடும், இனவாதமுமே அவ்விரு ஷைத்தான்களும் ஆகும். குடும்பக்கட்டுப்பாடு என்ற உருவில் தோன்றியுள்ள ஷைத்தான் அவர்களின் தனிப்பட்ட மக்கள் மீது ஆதிக்கம் கொண்டுள்ளது. இனவாதம் என்ற பைசாசம் அவர்களின் சமூகங்களிலும் ஆட்சிகளிலும் ஆதிக்கம் பெற்றுள்ளது. முதலாவது ஷைத்தான் மக்களில் ஆண்-பெண் அனைவரினதும் மதியை மயக்கி, உணர்வுகளைத் தாக்கித் தங்கள் சந்ததியினரை அவர்கள் தங்கள் கரங்களாலேயே அழிக்க ஏவிவிட்டுள்ளது. கருத்தரிப்பதைத் தடைப்படுத்தும் முறைகளையும் கருவுற்றுவிட்டால் அதனைச் சிதைத்துவிடும் வழிவகைகளையும், என்றுமே கருத்தரிக்காது மலடாக்கிவிடும் முறையையும் அது அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. தங்கள் சிசுக்களைத் தாங்களே கொலை செய்யும் அளவு ஈவிரக்கமற்ற முரட்டுத்தனத்தையும் அரக்க சுபாவத்தையும் அது அவர்களின் மனங்களில் தோற்றுவித்துள்ளது. இப்படிச் செய்து இந்த ஷைத்தான் அவர்களை மிக வேகமாக அழிவின்பால் இட்டுச்செல்கிறது.

தேசியம் என்ற ஷைத்தானின் தீங்கும் சாமானியமானதன்று. அது மேல்நாட்டு மக்களில் அரசியல் தலைவர்கள் தளபதிகள் முதலியோரிடமிருந்து தூயசிந்தனையையும், சீரிய நிர்வாகத்தையும் இல்லாமலாக்கி அவர்களிடையே போட்டி, பொறாமை, பிடிவாதம், முரட்டுத்தனம், துவேசம், வெறி, பேராசை போன்ற தீய பண்புகளை வளர்த்துள்ளது. இதன் மூலம் அவர்களில் ஒரு பகுதியினரை மற்றவர்களுக்கெதிராகத் தூண்டிவிட்டு அவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு மத்தியில் பிளவையும் பிரி

தேசிய நூலகம் பிரிவு

வையும் ஏற்படுத்தியுள்ளது. இதுவும் அவர்களுக்கு இறைவன் கொடுத்துள்ள ஒருவிதத் தண்டனையேயாகும். இத்தீய சக்தி இன்னும் சில காலத்தின் பின்னர் ஒரே முறையில் அவர்களுக்கு ஏற்பட இருக்கும் பேரழிவுக்கு அவர்களை வழிநடத்திச் செல்கிறது. இந்த ஷைத்தான் நச்சுப்புகையை உலகெங்கிலும் பரப்பி எந்த நிமிடத்திலும் எங்கிருந்தும் பேரழிவு ஏற்படலாமென்ற பயங்கர நிலையை தோற்றுவித்துள்ளது. அழிவு ஏற்படக்கூடிய நேரம் வருவது மட்டும்தான் தாமதம்; அந்த நேரம் வந்துவிட்டால் நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவு ஏற்படும். முன்பு வாழ்ந்த மக்களுக்கேற்ப அழிவுகளை இதனோடு ஒப்பிட்டு நோக்கினால் அவை மிக மிக அற்பமானவையாகவே இருக்கும்.

எதிர்கால யுத்தம்

நான் மிகைப்படக் கூறுவதாக எண்ணிவிடாதீர்கள். ஏனெனில் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் எதிர்காலத்தில் மூழ இருக்கும் யுத்தங்களின் போது உபயோகிப்பதற்காக தயாரிக்கப்படும் கருவிகளினால் விளையப்போகும் தீமைகளை எண்ணி அந்நாட்டு அறிஞர்களே நடுநடுங்கிப்போய் இருக்கிறார்கள். ஓர் உலக யுத்தம் மூண்டால் அதனால் ஏற்படப்போகும் பயங்கர விளைவுகளை எண்ணி செய்வதறியாது தவிக்கிறார்கள். அமெரிக்க இராணுவத்துறையின் அதிகாரிகளில் ஒருவரான திரு. சேகல் நியுமென் எழுதியுள்ள ஒ‌ரு கட்டுரையில் எதிர்காலத்தில் ஒரு யுத்தம் ஏற்பட்டால் அதன் விளைவுகள் எங்ஙனம் இருக்கும் என்பது பற்றி பின்வருமாறு கூறுகிறார்: 'இனி நடைபெறும் யுத்தங்கள் போர் வீரர்களிடையே நடைபெறும் நேரடித் தாக்குதலாக இராது. மனித இனத்தையே பூண்டோடழிக்கும் பேரழிவாகவே அவை அமையும், விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள உயிரும் உணர்வுமற்ற, நண்பன் யார்? பகைவன் யார்? என்று பகுத்துணரும் சக்தியற்ற இயந்திரங்களே இனிமேல் இதுவரை இராணுவ வீரர்கள் செய்து வந்த யுத்த வேலைகளைச் செய்து முடிக்கும். இனிமேல் இரு சாராரிடையே ஒரு களத்தில் கோட்டை கொத்தளங்களில் சண்டை நடைபெறப்போவதுமில்லை. ஏனெனில் எதிரியின் பலம் அவனது படைபலத்தில் தங்கியிருக்கவில்லை. அது அவனது நிர்வாகத்தின் கீழ் உள்ள நாடுகள், வர்த்தகச் சந்தைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தான் தங்கியுள்ளது என்பது தற்காலக் கருத்து. எனவே இனிமேல் இரு சாராரிடையே சண்டை மூண்டால் அது நாட்டிலும், நகரிலும், விண்ணிலும், மண்ணிலும் நடைபெறும். குண்டுகளாலும், நச்சுப் புகைகளாலும் மக்களை இலட்சக்கணக்கில் கொன்று குவிக்கும் நோய்க்கிருமிகளாலும் எதிரியின் நாடு விண் மார்க்கமாக தாக்கப்படும். இதற்காக இதுகாலம் வரை பல்வேறு வகையான குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ''லுவிசைட் போம்'' என்பது அதிலொன்று. இலண்டன் மாநகரை தரைமட்டமாக்க இந்த வகை குண்டுகளில் ஒன்றுமட்டுமே போதுமானது. ''கிரீன்காஸ்'' என்று ஒரு வகை நச்சுப் புகையைக் கண்டுபிடித்துள்ளார்கள். இப்புகையை ஒருவன் சுவாசிக்க நேர்ந்தால் அவனுக்கு நீரில் மூழ்கிய ஒருவனுக்கு ஏற்படுவது போன்ற உணர்வு ஏற்படும். ''பேலோகுரொஸ்'' என்று வேறு ஒரு வகைப் புகையுண்டு. இது பட்டுவிட்டால் பாம்பின் விஷம் ஏறுவது போன்ற ஒரு நிலை ஏற்படும்.

மின்சக்தி குண்டு

இவையல்லாத பன்னிரண்டு வகையான புகைகளுள்ளன. அவற்றால் தாக்குண்டவுடன் அவற்றின் தீமை விளங்காது. ஆனால் அவை மறைமுகமாகத் தாக்கும். அதன் தீங்கிலிருந்து தப்பவே முடியாது. மற்றொரு வகையான புகை, அது ஆகாயத்தில் எழுந்து பரந்து நிறைந்துவிடும். அப்பால் அந்த எல்லையால் ஒரு விமானம் பறந்தால்கூட அதில் செல்வோர் அனைவரும் பார்வையிழந்து குருடர்களாகிவிடுவர். வேறுவகையான நச்சுவாயுவைக் கண்டுபிடித்துள்ளார்கள். அதில் ஒரு தொன் நிறையான வாயுவைப் பாரிஸ் நகரில் பரவவிட்டால் போதும், அங்குள்ள மக்கள் அனைவரும் ஒரு மணித்தியாலத்தில் மடிந்துவிடுவார்கள். இந்தப் பயங்கரமான வேலையைக் கூட மிகச் சுலபமாகச் செய்யலாம்.

நாட்கணக்கில் பாடுபட்டு இதைச்செய்து முடிக்க வேண்டியதில்லை. ஒரு சில விமானங்களின் உதவியால் சொற்ப நேரத்துக்குள் மாபெரும் நாசத்தையே ஏற்படுத்திவிடலாம்.

மின் சக்தியால் இயக்கப்படும் பொருள்களை எரித்துச் சாம்பலாக்கிவிடும் ஒருவகை குண்டும் உள்ளது. அதில் ஒன்று ஒரு கிலோகிராம் நிறைதான் இருக்கும். ஆனால் இதன் சக்தியோ மிக அபாரமானது. ஏதாவது ஒரு பொருளுடன் மோதினால் மூவாயிரம் பரனைற்று அளவு வெப்பத்தை அது உண்டாக்கிவிடும். இதனால் மூளும் தீயை எந்தவகையிலும் அணைத்துவிடமுடியாது. நீர் இதனை அணைக்க பயன்படவும் மாட்டாது. ஏனெனில் தண்ணீர் இதனுடன் சேர்ந்தால், பெற்றோலைப்போல மேலும் மேலும் எரியச்செய்யவே அது உதவும். இதனை அணைத்து விடும் எந்தப் பொருளையும் இது வரை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கவில்லை. இவ்வித குண்டுகளை தலைநகர்கள், பட்டணங்கள் ஆகிய இடங்களில் போட்டு அவற்றை ஒரு கோணம் முதல் மறுகோணம் வரை மிக இலகுவாக எரித்துவிடலாம். இந்தக் குண்டுகளின் தீயிலிருந்து யாரும் தப்பியோட முயன்றால் நச்சு வாயுவை வீசி அவர்களையும் அழித்துவிடலாம்.

அழிவது நிச்சயம்

நவீன யுத்தக்கருவிகளை உபயோகித்து உலகின் மிகப் பாதுகாப்பான மிகப்பெரிய நகரங்களைக்கூட சொற்ப நேரத்தில் அழித்துவிடலாம். இரவு நிம்மதியாகத் தூங்கச் சென்றவர்களை நச்சுப்புகையைப் பரப்பி நஞ்சூட்டி காலையில் கண் விழிக்காது செய்துவிடலாம். நச்சுவாயுவைப் பரப்பி கால் நடைகள், பயிர் பச்சைகள் அனைத்தையும் பூண்டோடு அழித்துவிடலாம். நீரிலும் நிலத்திலும் விஷத்தைக் கலந்து அனைத்தையும் முற்றாகவே துவம்சம் செய்து விடலாம். நாமாக இவ்வாறு கூறவில்லை. நவீன விஞ்ஞானிகள்தான் பயங்கரமான இந்த உண்மைகளைக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பயங்கரமான ஆபத்துகளில் இருந்து எவருமே தப்பிவிட முடியாது. இக்கருவிகளை உபயோகித்து விட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை யாருமே தடுத்து நிறுத்தவும் முடியாது. எனவே தன் எதிரிகளைவிட தான் முந்திக்கொள்ள வேண்டுமென்று முயன்று இருதரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் குண்டுமாரி பொழிந்து ஈற்றில் அனைவருமே அடியோடு அழிந்து போவதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு யுத்தத்துக்காக மேல்நாட்டு சமுதாயங்கள் செய்யும் முன்னேற்பாடுகள் பற்றிய சுருக்கமான ஒரு குறிப்புத்தான் இது. மேலும் விபரம் வேண்டுமானால் ''மீண்டும் உலக யுத்தம் மூண்டால் அது எங்ஙனமிருக்கும்'' என்ற நூலைப்படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இது ஜெனீவாவிலுள்ள உலகப் பாராளுமன்றக் குழுவினரால் வெளியிடப்பட்ட பயன்மிக்க ஒரு நூலாகும். இதைப் படித்தால், மேல்நாட்டு நாகரிகம் தன் கரத்தால் தன்னையே அழித்துக்கொள்ளும் நிலையை அடைந்துவிட்டது என்பதையும் அதன் ஆயுள் மிகவும் குறுகியது என்பதையும் அறிந்து கொள்ளலாம். மேல்நாட்டு நாகரிகம் என்ற பெரு மரத்தின் ஆணிவேர்கூட ஆட்டம் கண்டுவிட்டது. அதன் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அடுத்த ஒரு யுத்தப் பிரகடனத்தோடு அதன் அழிவும் வந்து சேரும். இன்றுள்ள நிலையில் இரு பெரும் வல்லரசுகளிடையே யுத்தம் மூண்டுவிட்டால் போதும். அது இந்த நாகரிகத்தின் அழிவாகத்தான் முடியும் என்பது திண்ணம். ஏனெனில் இரு பெரும் வல்லரசுகள் யுத்தத்தில் இறங்கினால் அது உலக யுத்தமாக மாறுவது தடுக்க முடியாததாகும். உலகயுத்தம் மூண்டால் அதனால் ஏற்படும் அழிவும் அனர்த்தங்களும் அகில உலகமெங்கும் வியாபகமானவையாகவே இருக்கும். ''மனிதர்களின் கைகள் தேடிக்கொண்ட (தீ)வினையின் காரணமாக கடலிலும் தரையிலும் தீமைகள் தோன்றிவிட்டன. (அவற்றிலிருந்து) அவர்கள் விலகிக்கொள்ளும் பொருட்டு அவர்களின் (தீ)வினைகளில் சிலவற்றை அவர்கள் இம்மையிலும் சுகிக்கும்படி அவன் செய்கிறான்'' (அல்குர்ஆன் 30 : 41)

சுருங்கச் சொல்வதானால், உலகின் ஆட்சி, அதிகாரம் கைமாறும் காலம் அண்மிவிட்டது. அக்கிரமக்காரர்களிடமிருந்து உலகின் தலைமைத்துவத்தைக் களைந்து வேறு ஒரு சமுதாயத்தவரிடம் அதனை ஒப்படைக்கப்படும் நேரம் வந்துவிட்டது என்பது தெளிவு. புதிதாகப் பதவிக்கு வரும் சமுதாயம் எது என்று இறைவன்தான் அறிவான். வேறு யாரும் முன்கூட்டி இதைச் சொல்ல முடியாது. ஒருவேளை அது பலவீனமானது என்று கணிக்கப்படும் ஒரு சிறு சமுதாயமாக இருக்கலாம். எனவே அல்லாஹ்வின் தெரிவுக்குத் தாங்கள் தகுதியுடையவர்களா என்று ஒவ்வொரு சமுதாயத்தாரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒரு பொது நியதி

உலகில் தலைமைத்துவத்தைப் புதிதாக ஏற்கப்போவது யார் என்று ரஹஸ்யம் கூற முடியாது. அது இறைவனின் அருள். அவன் நாடியவர்களுக்கு அதைக் கொடுப்பான். "(நபியே!) நீங்கள் கூறுங்கள்: இறைவா 'நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கிவிடுகின்றாய்'' (அல்குர்ஆன் 3:26) ஆனால் இதற்கும் ஒரு பொது நியதியை அவன் வகுத்துள்ளான். அதைப்பற்றித் திருமறை இப்படிக் கூறுகிறது: "(நீங்கள் இறை கட்டளைகளைப் புறக்கணித்தால்) உங்களிடத்திற்கு வேறு ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி விடுவான். அவர்கள் உங்களைப்போல் (தீயவர்களாக) இருக்கமாட்டார்கள்.'' (47 : 38) அதாவது அக்கிரமக்காரர்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்து உயர் பண்பும் நல்ல நடத்தையும் உள்ளோரிடமே அதனை இறைவன் ஒப்படைக்கின்றான். இதுதான் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு வேண்டிய தகுதி. எனவே உலகின் தலைமைத்துவத்தை புதிதாக ஏற்க இருப்போர் யார் என்று நாம் சொல்ல முடியாவிட்டாலும் ஒன்றைமட்டும் நிச்சயமாகக் கூறிவிடலாம். அழிவுப்பாதையில் விரைந்து கொண்டிருக்கும் மேனாட்டு மக்களிடமுள்ள உயர் பண்புகளையும் நல்ல அம்சங்களையும் மட்டும் கைக்கொள்வதோடு நின்றுவிடாது, இறைவனின் சாபத்துக்கு அவர்களை உள்ளாக்கிய தீய அம்சங்கள் அனைத்தையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் எந்த ஒரு சமுதாயமும் உலகின் தலைமைத்துவத்தைப் பெறமுடியாது. இது உண்மை ●

வாழ்க்கை...

இது ஒரு போராட்ட களம். ஒரு முஃமின் இதில் தனித்துவிடமாட்டான்; அவனுடன் எண்ணற்ற விசுவாசிகள் இணைந்து நிற்பர்; அவனது சுக துக்கங்களில் பங்கு கொள்வர். அவனது ஈருலக நலன்களுக்காக இறைவனிடம் பிரார்த்திப்பர். இஸ்லாமிய சமூக வாழ்வியலின் இந்த சிறப்பான உறவையிட்டு ரசூல் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

> ''ஒருடலின் உறுப்புகளைப் போல் ஈமானுடையவர்களை பரஸ்பர அன்பு, கருணை, பாசம் கொண்டவர்களாக நீங்கள் காண்பீர்கள். உடலின் ஓர் அங்கம் நோய்வாய்ப்பட்டால், உடல் முழுதும் (அதன் வேதனையால்) எரிகிறது. உடனே துடித்தெழுந்து (அந்த அங்கத்தின்) உதவிக்கு விரைகிறது''

இச் சிறப்பான சமூக உறவு, வெறுமனே இருந்து விடுவதால் என்றுமே உருவாக முடியாது.

எனவே—

நீங்கள் இஸ்லாத்தை முழுமையாகப் பின்பற்றுங்கள்; அதன் சட்டதிட்டங்களைக் கொண்ட ஒரு சமூக அமைப்பை நிறுவுங்கள்; அதன் நிழலில் உங்கள் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காணுங்கள். மாற்றம் வரும்; ஏற்றம் கிடைக்கும்.

PRINTED AT: IPC PRINTING PRESS
320, N. M. M. ISHAK MAWATHA COLOMBO-9.